**வாக்குமூலம்**
**குற்றவியல் நடுவர் நீதிமன்றம், அறந்தாங்கி**
**வழக்கு எண். STC 1209/2017**
**வழக்கு சாட்சி. அ.சா.1**

| | | | |
|---|---|---|---|
| **பெயர்:** | செந்தாமரை | **ஜாதி:** | |
| **தந்தை பெயர்:** | க/பெ.சுப்பிரமணியன் | **தொழில்:** | |
| **கிராமம்:** | | **சமயம்:** | |
| **தாலுகா:** | | **வயது :** | 54/2024 |

**29.04.2024**
**எதிரி ஆஜர்.**
சாட்சி சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டார்.
**முதல் விசாரணை**

நான் நாகுடியில் வசித்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். புகாரானது நான் கொடுத்ததுதான். மேற்படி **புகாரானது அ.சா.ஆ.-1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. நாங்கள் அடகுகடை நடத்தி வருகிறோம். கடந்த 2015 ஆம் வருடம் ஒரு நாள் சேவியர் என்பவர் எங்கள் கடைக்கு வந்து அவருடைய நகைக்கு அசலும் வட்டியும் செலுத்தாமல் பிரச்சனை செய்தார். என்னை அசிங்கமாக தகாத வார்தைகளால் பேசினார். பின்பு என்னை ஆள்வைத்து காலிசெய்துவிடுவதாக மிரட்டினார். இது குறித்து காவல் நிலையத்தில் புகார் செய்தேன். போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

எத்தனை ஆண்டுகளாக நகை அடகுகடை வைத்துள்ளோம் என்றால், 22 ஆண்டுகளாக. நகை அடகுகடை உரிமமானது யார் பெயரில் உள்ளது என்றால், எனது பெயரில்தான் உள்ளது. நகை அடகு கடையானது நாகுடியில் எங்கு உள்ளது என்றால், சுப்பிரமணியபுரம் ரோட்டில் உள்ளது. எங்களது கடைக்கு அருகில் எத்தனை கடைகள் தோராயமாக உள்ளது என்றால், 15 கடைகள் இருக்கும். எதிரி எந்த தேதியில் என்னிடம் அடகு வைத்தார் என்றால், எனக்கு ஞாபகம் இல்லை. அடகு வைத்த நகை எத்தனை பவுன் இருக்கும் என்றால், எனக்கு சரியாக தெரியவில்லை. பல வருடங்கள் ஆகிவிட்டது. கிழக்கு புறமும் மேற்கு புறமும் என்ன என்ன கடைகள் உள்ளன என்றால், கிழக்கு புறம் நகை கடை, சலூன் கடை, மேற்கு புறம் மண்டபம் மற்ற கடைகள் எல்லாம் உள்ளது. புகாரில் நான் கூறியுள்ள 8 அயிட்ட நகைகள் என்ன என்ன என்றால், தற்போது ஞாபகம் இல்லை. 05.12.2014 ஆம் தேதி நாங்கள் அனுப்பிய ஏல நோட்டீசை போலிசாரிடம் ஒப்படைத்தோமா என்றால், எனக்கு ஞாபகம் இல்லை.

2) நகை கடைக்கு எத்தனை மணிக்கு நான் வருவேன், எத்தனை மணிவரை இருப்பேன் என்றால், காலை 06, 07 மணி முதல் இரவு 09.00 மணிவரை அங்கு தான் இருப்பேன். எத்தனை முறை ஏல நோட்டீசை எதிரிக்கு அனுப்பியுள்ளோம் என்றால், ஒரு முறை அனுப்புவோம். சில நபர்களுக்கு இரண்டாவது தடவையும் அனுப்புவோம். அவ்வாறு அவர்கள் திருப்ப வரவில்லை என்றால் ஏலத்தில் விட்டுவிடுவோம். 8 அயிட்ட நகைகளுக்கு வட்டி செலுத்தினாரா என்றால், எதற்கும் செலுத்தவில்லை. நகைக்கு வட்டியினை செலுத்தியுள்ளார் என்றாலும், நான் வழக்கிற்காக பொய்யாக கூறுகிறேன் என்றால், சரியல்ல. நான் எந்த தேதியில் புகார் அளித்தேன் என்றால், எனக்கு சரியாக ஞாபகம் இல்லை. போலிசார் புகார் அளித்தபின்பு என்னையும் எதிரியையும் அழைத்து விசாரணை செய்தார்களா என்றால், என்னை விசாரணை செய்தார்கள். எதிரியை விசாரணை செய்தார்களா என்று தெரியாது. எதிரிக்கு எதிரான இவ்வழக்கினை நான் மேல் நடத்த விரும்புகிறேனா என்றால், இல்லை. நான் வழக்கினை வாபஸ் பெறவே விரும்புகிறேன். வழக்கினை தள்ளுபடி செய்வதில் எனக்கு ஆட்சேபனை உள்ளதா என்றால், இல்லை.

**மறுவிசாரணை**

இல்லை